# தமிழர் பண்பாடுகளில் விருந்தோம்பலின் சிறப்பு

21

**முனைவர் க. கீதா**

**இணைப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்.**

**கிருஷ்ணசாமி மகளிர் அறிவியல்,கலை மற்றும் மேலாண்மையியல் கல்லூரி கடலூர்.**

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலம் முதல் இக்காலம் வரை தமிழர்களின் பண்பாட்டில் தலைசிறந்தது விளங்குவது, விருந்தோம்பலின் பண்பாடு ஆகும். அப்பண்பாட்டில் இன்றளவும் குறைவில்லாமல் பின்பற்றி வருகின்றனர். சங்க கால மக்கள் தங்களின் வாழ்வை திணை வாரியாக வகுத்துக் கொண்டனர். அவற்றில் குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை என ஐந்து வகைகளில் தங்களின் வாழ்வை வகுத்து கொண்டனர். அவற்றில் தலையாய கடமையாக விருந்தோம்பலை ஒரு முக்கிய கோட்பாடாக கருதினர்.

பழங்கால சமுதாய மக்கள் ஒருவருக்கொருவர் அன்புடனும் பாசத்துடன் பழகி கூடி வாழும் பண்பாட்டை வெளிபடுத்தினார். தான் பொருளீட்டி வந்ததை தான் மட்டும் உண்ணாமல் பிறருக்கும் பகிர்ந்து கொடுக்கின்ற பண்பாட்டை தலையாய கடமையாக கொண்டிருந்தனர். இதனை வள்ளுவர் அவர்கள்

**“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**

**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை”** குறள் 322

என்னும் திருக்குறள் மூலம் அறியலாம். எனவே சங்க கால மக்கள் தங்களின் வாழ்வியலை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கும் பண்பாட்டினை தலையாய கடமையாக கொண்டுள்ளனர். இவற்றில் பழங்கால சமுதாய நிலை, இனக்குழுவின் மாற்றம், கூடி வாழும் பெருமை, திணை அடிப்படையில் உருவாக்கப்பட்ட மக்களின் வாழ்வியல், சங்க கால மக்களின் விருந்தோம்பல், தான் வேட்டையாடிய பொருளை தான் மட்டும் உண்ணாமல் மற்றவர்களுக்கும் கொடுக்கும் பண்பு. பழங்கால மக்களின் விருந்தோம்பல் அவற்றில் அவர்களின் கொடை சிறப்பு போன்ற கருத்துகள் பாலை நில மக்கள் விருந்தோம்பல் அவர்கள் பாடி பரிசு பெற்றதை பகிர்ந்து கொடுக்கும் பாங்கு விருந்தோம்பலில் உழவன் உழைக்காதவரின் பண்பாடுகள் பற்றிய தலைப்புகளில் இக்கட்டுரை ஆராயப்பட உள்ளது.

**முன்னுரை**

சங்ககாலம் முதல் இக்காலம் வரை தமிழர்களின் பண்பாட்டில் தலை சிறந்த பண்பாடாக விளங்குவது விருந்தோம்பல் அவற்றில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, மானம் பெருமை, குடிமை ஈகை, விருந்தோம்பல் ஆகிய எல்லாவற்றையும் குறிக்கலாம். அகவாழ்வில் மக்கள் கடைபிடித்த விருந்தோம்பல் உணர்வே புறவாழ்வில் கொடைச் சிந்தனையாய் உருவெடுத்தது. அரசர்களையும், வள்ளல்களையும் புலவர்கள் புகழ்ந்து பாடியதிலும்

அவர்களின் கொடைப்பற்றியே அதிகமாகப் பாடியுள்ளனர். அவ்வகையில் சங்ககால சமூதாயத்தில் விருந்தோம்பலின் சிறப்பினையும் அவற்றால் ஏற்படும் சமூக பெருமையும் இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**பழங்கால சமுதாயம்**

மனித இனம் கூடிவாழும் மிகப்பெரிய கூட்டதையே சமுதாயம் என்று கூறுவர். ஒருவனோடு ஒருவன் தொடர்பு கொண்டு வாழும் ஒரு கூட்டு வாழ்க்கையைச் சமுதாயம் என்று குறிக்கின்றோம். பழங்காலத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக வேவ்வேறு இடங்களில் தொடர்புகளற்று வாழ்ந்து வந்தனர். இக்குழு வாழ்க்கையைச் சமூதாயம் என்ற சொல்லாலும் வரலாற்றில் இனக்குழச் சமூதாயம் என்ற சொல்லாலும் அடையாளப் படுத்துகின்றனர்.

சங்ககாலத்திற்கு முன் தமிழகத்தில் நிலை கொண்டிருந்த சமுதாயம் இனவேறுபாடற்ற சமுதாயம், அச்சமுதாயம் இனக்குழச் சமத்துவ வாழ்க்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது. தமிழகத்தில் இனக்குழுக்கள் திணைகளின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டிருந்தன. இனக்குழுக்களாக வாழ்ந்த மக்கள் வேட்டையாடியும், உணவு சேகரித்தும் வாழ்க்கை நடத்திவந்தனர். அவ்வாறு வேட்டையாடிக் கொண்டுவந்தவற்றைத் தான்மட்டும் உண்ணாமல் பலருக்கும் பகுத்துண்டு வாழ்ந்தனர்.

சங்ககாலத்தில் மக்கள் குறிஞ்சி, முல்லை நிலங்களில் வேட்டையாடியும். நிரைமேய்த்தும் ஆதிபொதுவுடைமைச் சமூகமாக, இனக்குழுவாக வாழ்ந்தனர். அந்தக் காலகட்டத்தில் மக்களிடையே உணவுக்காகவும். கால்நடைகளுக்காகவும் அடிக்கடிப் போர்கள் நிகழ்ந்தன. காலவோட்டத்தில் சமூதாயம் மாற்றம் படிப்படியாக நிகழ்ந்தது. ஆதிபொதுவுடமைச் சமூகத்திலிருந்து உடமைச் சமூகம் தோன்றின. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் தலைமையில் முடியாட்சி தோன்றியது.

பேரரசர்களாயினும், குறுநில மன்னர்களாயினும் அவர்கள் இனக்குழு வளர்ச்சி முறையால் தோன்றியவர்களே. எனவே தாம்பெற்றதை பகிர்ந்து வாழ்தல் அவர்களின் தொடக்ககாலப் பழக்கமாகும். பின்னர் அதுவே பண்பாடானபோது கொடையாய் வளர்ச்சியுற்றது. எனவே வளம் நிறைந்தவன் தவறாது வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

**சங்ககால மக்களின் விருந்தோம்பல்**

மனித வரலாற்றில் அரசு என்ற அமைப்பு இல்லாதிருந்த காலகட்டம் ஒன்று இருந்தது. அக்காலத்தில் மக்கள் தனித்தனியாகச் சொத்துக்கள் இல்லாமல் பொதுவுடமையுடன் வாழ்ந்தனர். தன் தேவைக்காக வேட்டையாடிக் கொண்டுவந்த பொருட்களைத் தான் மட்டுமே தனித்து உண்ணாமல் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் கொடுத்து வாழ்ந்தனர். ஆகவே கொடை என்ற பண்பு அங்கேயே தோற்றம் பெற்றது. தான் மட்டும் வாழவேண்டுமென்ற சுயநலமற்றவர்களாய் அன்றைய தமிழர்கள் இருந்துள்ளனர்.

நிலவுடைமைச் சமூதாயம் தோன்றியபோது போட்டிகள் ஏற்பட்டுப் போர்கள் நடந்தன. அப்போர்களில் வென்றவன் தோற்ற நாட்டிலிருந்து பொன்னும், பொருளும் அள்ளிவந்தனர். அவற்றைத் தலைவன் என்ற முறையில் தான்மட்டும் உய்க்காமல் தன்னுடன் சேர்ந்து போர் செய்த

அனைவருக்கும் அவரவர் தகுதிக்கேற்ப பிரித்துக் கொடுத்தான். மேலும் போரில் பங்கு பெறாதவர்களுக்கும் அவர்களின் வறுமையைப் போக்கும் பொருட்டு பொன்னும், பொருளும் கொடையாகக் கொடுத்தான். இதனை தொல்காப்பியர்,

***"ஆ கோள் பூசல் மாற்றே***
***நோயின்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்***
***தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடை"*** (புறத்திணை. 3)

என்று குறித்தார். வெட்சி என்னும் போர் முறையில் கொண்டுவந்த பசுக்களைப் பூசலை மாற்றி நோயில்லாமல் கொண்டுவந்து நிறுத்த வேண்டும் என்று சொல்லிய இடத்தில் நிறுத்தி அப்பசுக்களைச் சமுதாய தருமப்படி பங்கிட்டுப் பின்னர் யாவரும் ஒருமுக மாக உண்டபின் சமுதாயத்தில் வேண்டியவர்க்கும் கொடுத்தல் தொல்காப்பியனார் காலத்துப் பகிர்ந்தளித்தல் சமதருமமாகும்.

பாதீடு என்பது பங்கிடுதல். போர் செய்த வீரர்க்கும். ஒற்றர்க்கும் மற்றும் போரில் வெற்றி வரும் எனச் சொல்லி ஊக்கியவர்க்கும் வெற்றியாகக் கொண்டுவந்த பரிசுகளைக் கொண்டுவந்து கொடுப்பர். மேலும் சமுதாயம் நல்ல நிலையில் இருப்பதற்காகத் தத்தம் தொழில்களைச் செய்யும் அரசர், வணிகர், வேளாளர் ஆகியோர்க்கும். வேண்டிய பசுக்களை கொடுத்தபின் இவர்களல்லாத தச்சர், குயவர், கொல்லர் முதலியவர்க்கும் மேலும் பசுக்கள் இல்லாதவர்க்கும் பசுக்களைப் பங்கிட்டுக் கொடுப்பர். இதனை,

**"ஒள்வாள் மலைந்தார்க்கும் ஒற்றாய்ந் துரைத்தார்க்கும்**
**புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் – விள்வாரை**
**மாறட்ட வென்றி மறவர்தம் சீறூரில்**
**கூறிட்டார் கொண்ட நிரை"** (பு.வெ.மா.வெட்சி. 3)

என்னும் புறப்பொருள் வெண்பாமாலை மூலம் அறியலாம்.

**பழங்கால மக்களின் விருந்தோம்பல்**

தொல்சமூகத்தில் தமிழர் நிலத்தைத் திணைகளின் அடிப்படையில் பகுத்தனர். இப்பகுப்பு இயற்கையான ஒன்றாக இருந்தது. அந்தந்த பகுதிகளில் வாழும் மக்கள் 95 சமுதாயமாகவே வாழ்ந்தனர். அச்சமுதாய மக்கள் தங்களை நாடிவரும் பாணர்களுக்கு எவ்வாறு விருந்தளித்தனர் என்றும் அவ்விருந்தோம்பலின் மூலம் கொடைப் பண்பை பின்பற்றியதையும் பெரும்பாணாற்றுப்படையில் வரும் பழங்குடி மக்களின் வாழ்வும், சமுதாயச் சூழலையும் கொண்டு நன்கு அறியலாம்.

பரிசு பெற்றுவரும் பாணன் பரிசுபெறச் செல்லும் பாணனிடம் வழியின் இயல்பையும் அங்குவாழும் மக்களின் விருந்தோம்பல் தன்மையையும் எடுத்துரைக்கின்றான்.

**பாலை நில மக்களின் விருந்தோம்பல்**

பாலை நிலத்தில் வாழும் எயினர்கள் தன்னை நாடிவரும் பாணர்களுக்கு நிலத்தைத் தோண்டி எடுத்த புல்லரிசிச்சோறும், உப்புக்கண்டமும் உண்பதற்குத் தந்தனர் என்பதையும், அவர்களது

குடியிருப்பில் தங்கினால் மேட்டுநிலத்தில் விளைந்த நெல்லரிசிச் சோற்றை உடும்புப் பொரியலோடு தருவர்; அதை நீங்கள் உண்டு மகிழலாம் என்பதை,

**"கொடுவில் எயினக் குறும்பில் சேப்பின்**
**களர்வளர் ஈந்தின் காழ்கண் டன்ன**
**சுவல்விளை நெல்லின் செவ் அவிழ்ச் சொன்றி,**
**ஞமலி தந்த மனவுச்சூழ் உடும்பின்**
**வறைகால் யாத்தது, வாயின்தொறும் பெறுகுவிர்"** (பெரும்.129-133)

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

**முல்லை நில மக்களின் விருந்தோம்பல்**

முல்லை நிலத்தில் வாழும் மக்கள் இடையர்கள். இவர்கள் வசிக்கும் குடிசையில் சுற்றத்தோடு தங்குபவர்களுக்கு நண்டுகளின் சிறுபார்ப்பினைப் போன்ற தினையரிசிச் சோற்றையும், பாலையும் தந்துள்ளனர். இதனை,

**"மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்**
**இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப்பு அன்ன**
**பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்"**(பெரும்.166-168)

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. அங்குள்ள மேய்ச்சல் நிலங்களைக் கடந்து சென்றால் அங்கு நீண்ட கொத்துக்களையுடைய பூளைப்பூபோன்ற வரகுச் சோற்றை வேங்கைப் பூவை ஒத்ததான அவரைப் பருப்பை அவித்து வரகுச் சோற்றோடு சேர்த்து உணவாகக் கொடுப்பர்.

**"நெடுங்குரல் பூளைப் பூவின் அன்ன**
**குறுந்தாள் வரகின் குறள் அவிழ்ச் சொன்றி**
**புகர் இணர் வேங்கை வீ கண்டன்ன,**
**அவரைவான் புழுக்குஅட்டி, பயில்வுற்று**
**இன்சுவை மூரல் பெறுகுவிர்"**(பெரும்.192-196)

என்ற வரிகள் முல்லைநில மக்களின் விருந்தோம்பல் பண்பையும், அவ்விருந்தோம்பல் மூலம் அவர்கள் உணவுக்கொடை செய்ததையும் தெரிவிக்கின்றன.

**மருத நில மக்களின் விருந்தோம்பல்**

முல்லை நிலத்தைக் கடந்து சென்றால் மருத நிலத்தை அடையலாம். அங்கு வாழ்பவர்கள் உழவர்கள். அவர்களுக்குப் பசி என்பதே தெரியாது. அந்தளவிற்கு வளத்தோடு வாழ்பவர்கள், அங்கு தங்கினால் வெண்மையான சோற்றை அவர்கள் வீட்டில் வளர்த்த கோழிப்பொரியலோடு தருவார்கள். இதனை,

**"வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி**
**மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர்"**(பெரும்.255-256)

என்றும் மேலும் நீங்கள் விரும்பினால் கருப்பஞ்சாற்றையும் பருகலாம் என்றும்,

**"கரும்பின் தீம்சாறு விரும்பினர் மிசைமின்"**(பெரும்.262)

என்றும் இடம்பெறும் அடிகள் மருதநில மக்களின் வளத்தையும் அவர்களது விருந்தோம்பல் பண்பையும் குறிப்பிடுகின்றது.

**நெய்தல் நில மக்களின் விருந்தோம்பல்**

நெய்தல் நிலத்தில் வாழும் வலைஞர்களின் குடியிருப்பிற்குச் சென்றால் சுவையான மதுவையும், பச்சை மீனைச் சுட்ட சூட்டொடு சேர்த்துத் தருவர். நீங்கள் சோர்வுற்ற காலத்தில் அதை உண்ணலாம்.

**"வெந்நீர், அரியல் விரல்அலை நறும்பிழி**
**தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்"**(பெரும்.281-282)

என்றும், அங்கிருந்து அந்தணர் குடியிருப்பிற்குச் சென்றால் அங்கே அவர்கள் கருடச்சம்பா என்ற நெல்லால் ஆக்கிய சுவையான சொற்றைச் சிவந்த பசுவினுடைய பாலில் இருந்து மோராக்கி அதிலிருந்து வெண்ணெய் எடுத்து அதில் வதக்கி வெந்த கொம்மட்டி மாதுளையினுடைய சுவையான காயை மிளகுப்பொடி. கலந்து கருவேப்பிலை சேர்த்து, மாங்காயை ஊறுகறியாகக் கொண்டு உண்பதற்குத் தருவார்கள் என்பதை,

**"……பறவைப் பெயர்ப் படு வத்தம்**
**சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து**
**உருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து**
**கஞ்சக நறுமுறி அளைஇ, பைந்துணர்**
**நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த**
**தகைமாண் காடியின், வகைபடப் பெறுகுவிர்"**(பெரும்: 305-310)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. மேற்குறித்த இடங்களைக் கடந்து சென்றால் பட்டினம் ஒன்றைக் காண்பீர்கள். அங்குத் தங்கினால் அங்குள்ள மக்கள் கொழுத்த பன்றியின் தசையோடு சுவையான கள்ளையும் தருவார்கள் என்பதனை,

**"கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்"**(345)

என்றும், அவ்விடத்தைக் கடந்து சென்றால் தண்டலை உழவர்களின் வீடுகள் இருக்கும்.: அங்கு தங்கினால் பலா, இளநீர், வாழைப்பழம், நுங்கு முதலியவற்றைத் தருவது. இவ்வுணவில் வெறுப்புத் தோன்றினால் சேப்பங்கிழங்கினை உண்ணலாம் என்பதனை,

**"தண்டலை உழவர் தனிமனைச் சேப்பின்**
**தாழ்கோட் பலவின் சூழ்சுனைப் பெரும்பழம்**
**வீழ்இல் தாழைக் குழவித் தீம் நீர்**
**கவைமுலை இரும்பிடிக் கவுள்மருப்பு ஏய்க்கும்**
**குலைமுதி;ர் வாழைக் கூனிவெண் பழம்**
**திரள் அரைப் பெண்ணைப் நுங்கொடு பிறவும்**
**தீம்பல் தாரம் முனையின் சேம்பின்**
**முளைப்புற முதிர்கிழங்கு ஆர்குவிர்"** (பெரும். 355-362)

என்றும் வரும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

**முடிவுரை**

தொல் சமுதாயத்தில் மக்கள் வேட்டையாடியும் உழுதும் கிடைத்தவற்றைத் தான்மட்டும் உண்ணாது தம்மை நாடிவந்த இரவலர்க்கும் பகிர்ந்தளிக்கும் இயல்பினராய் இருந்துள்ளனர். சங்ககாலத்தில் பொன்னும், பொருளும் கொடுத்து வறுமை தீர்க்கும் வள்ளல்கள் பலர் இருந்தனர். இப்பண்பு பழங்குடி மக்களிடமும் இருந்ததை மேற்குறித்த செய்திகளால் புலனாகிறது. பழங்குடிமக்கள் தம்மிடம் உள்ளற்றைக் கொண்டு விருந்தோம்பலை ஓர் அறமாகச் செய்ததனைப் பெரும்பாணாற்றுப் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

**துணைநூல்கள்:**

1.கு.சுந்தரமூர்த்தி, (ப.ஆ.), தொல்காப்பியம், பொருளதிகாரம், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு. அண்ணாமலைநகர், 1980

2.புறப்பொருள் வெண்பாமாலை, கழக வெளியீடு, சென்னை, 1978

3. பத்துப்பாட்டு மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை, 1975.